# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,936/4—1970 දෙසැම්බර් 17 වැනි බ්‍රහස්පතින්ද — 1970.12.17

14,936/4 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியிலை ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

ச. வ.—பீ 31/47

### உள்ளூரதிகாரசபைகள் தேர்தல் கட்டளைச் சட்டம்

84 ஆம் பிரிவின்கிழான கட்டளை

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 84 ஆம் பிரிவினுல் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்கா ஆகிய நான்—

(அ) பேருவலை நகர சபையின் 1, 2, 3, 4, 5, 6, 7, 8 ஆகிய வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்காக வாக்கெடுப்பொன்று எடுக்கப்படுந் தேதியாக 1970 ம் ஆண்டு திசெம்பர் 19 ந் தேதியைக் குறிப்பிட்டு, களுத்துறை மாவட்டத்துத் தேர்தல் அலுவலரால் மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 38ம், 41ம் பிரிவுகளின் கீழ் வெளியிடப்பட்ட 1970 ம் ஆண்டு திசெம்பர் 3ந் தேதியிடப்பட்ட அறிவித்தல்கள், மேற்சொல்லப்பட்ட வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்காக வாக்கெடுப்பொன்று நடைபெறுந் தேதி, தேர்தல் நடைபெறும் நேரம், வாக்கெடுப்பு நிலையங்கள் ஒவ்வொன்றும் அமைந்துள்ள இடங்கள் ஆகியன பற்றி இவ்வறிவித்தல்கள் சம்பந்தப்படும் அளவுக்கு, வறிதானதாகவும் பயனுடையதற்றதாயுமிருத்தலுடன் இது எக்காலத்தும் அப்படியே வறிதானதாகவும் பயனுடையதற்றதாகவுமிருந்ததாகக் கருதப்படுதலும் வேண்டுமென்றும் ; அத்துடன்

(ஆ) மேற்சொல்லப்பட்ட நகர சபையின் தற்பொழுது பதவியிலிருக்கும் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடையவுள்ள தேதியைக் கருத்திற் கொண்டு, களுத்துறை மாவட்டத் தேர்தல் அலுவலர், மேற்சொல்லப்பட்ட வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்கென வாக்கெடுப்பொன்று நடைபெறும் வேறொரு தேதி, தேர்தல் இடம்பெறும் நேரம், வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் இடங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு மேற்சொல்லப்பட்ட பிரிவுகளின் கீழ்ப் புதிய அறிவித்தல்களை வெளியிடுதல் வேண்டுமென்றும்,

இக்கட்டளைமூலம் வெளிப்படுத்துகிறேன்.

எப். ஆர். டயஸ் பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஞு டிசெம்பர் மீ 16 ந் உ.

12–917

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.